061

இலங்கை திறந்த பல்கலைக்கழகம்
சட்டமாணிப் பட்டப்படிப்புத் திட்டம்
இறுதிப் பரீட்சை 2008/2009
**LWU 2312** – குற்றவியல் சட்டம்
காலம்: மூன்று(03) மணித்தியாலங்கள்

திகதி: 23.03.2009 நேரம்: மு.ப 09.30 – பி..ப 12.30

ஐந்து(05) வினாக்களுக்கு மாத்திரம் விடை தருக.

தெளிவற்ற கையெழுத்துக்களுக்கு புள்ளிகள் குறைக்கப்படும்.

1. "......குற்றமான மன நிலை என்பது சந்தேகத்திற்கு இடமற்ற காயத்தின் விளைவை ஏற்படுத்தும் எண்ணமாகுமென்பது மிக வெளிப்படையுண்மையாகும் ஆனால் அறிந்து கொண்டே அசட்டையாக சரியாக உணரந்து கொள்ளக்கூடிய மற்றும் காயத்தின் விளைவை ஏற்படுத்தும் ஏற்றுக்கொள்ளமுடியாத ஆபத்தை எதிர்நோக்கும் தன்மை அல்லது அத்தகைய ஆபத்திற்கு நிதானமாக மனந்திறந்து செயற்படல் கூட உடனடியாக குற்றம் என ஏற்றுக்கொள்ளப்படக் கூடியவை........."

   Per Lord Bingham **J** in ***R vs G and another (2003) UKHL 50***

   குற்றமனம் எனும் கருத்தேற்பை தீர்க்கப்பட்ட வழக்கு மற்றும் மேற்தரப்பட்ட கூற்றின் அடிப்படையில் விமர்சித்து பகுப்பாய்வு செய்க.

2. நிமலுக்கும் அவனது அயலவரான சத்துரிக்கும் இடையேயான காதல் தொடர்பை முறித்துக்கொள்ள வழிவகுத்தவன் சாலியா என நிமல் எண்ணியதால் நிமல் சாலியா மீது வஞ்சம் கொண்டிருந்தான். ஒரு நாள் நிமல் வேலை முடிந்து வீடு சென்றுகொண்டிருந்த போது அவன் சாலியாவை நிறுத்தினான். நிமல் சாலியாவை நிலையாக நிறுத்தி வைத்து அவனது முகத்தின் மீது குத்தியதுடன் அவனால் முடிந்தவரை கடுமையாக அவனைத்தாக்கினான். அவனது தலை பல மாக கற்பாறை மீது மோதி அது சுயநினைவை இழக்கச் செய்ததால் சாலியா நிலத்தில் வீழ்ந்தான். பீதியடைந்த நிமல் சாலியா இறந்துவிட்டதாக எண்ணி மயக்கமடைந்திருந்த அவனது உடலை பின்புற ஒழுங்கைக்கு இழுத்துச் சென்று குப்பை கூழங்களால் அதனை மூடி மறைத்தான். அவன் அதில் விழுந்திருந்த போது குப்பை வண்டி அவன் மீது ஏறியதால் மறுநாள் சாலியா இறந்தான்.

   நிமலின் குற்றப் பொறுப்புடைமையை ஆராய்க.

3. பண நெருக்கடியில் இருக்கும் பாலித தான் வேலை செய்யும் கம்பனியில் சம்பளம் கொடுப்பதற்காக கொண்டுவரப்பட்ட பணத்தை கொள்ளையடிக்க தீர்மானித்தான். அவன் தனது திட்டத்தை நிறைவேற்ற குறிபார்த்து சுடும் துப்பாக்கி ஒன்றை வாங்கினான். அத்துடன் மோட்டார் சைக்கிள் ஒன்றையும் கடனாகப் பெற்றான். அலுவலகத்திற்கு மோட்டார் வண்டியில் சென்ற பாலித பணம் வைக்கப்பட்டிருக்கும் பெட்டியை பாரமளிக்கும் காவலாளியான பெரேரா வரும்வரை அங்கு காத்திருந்தான். பெரேரா வழமையாக பிஸ்ரோலுடன்((pistol) இருப்பான். பெரேரா கட்டடத்திற்கு நுழைய தயாராகும் போது பாலித அவன் பின்னால் விரைந்து சென்று அவனது குறிபார்த்து சுடும் துப்பாக்கியால் அவனது தலையின் பின்பாகத்தை தாக்கினான். பாலித்த பணத்தை எடுத்துக் கொண்டு தனது மோட்டார் சைக்கிளில் ஏறிக்கொண்டான்.

   அவனது தலையில் அடிவிழுந்த திகைப்பில் பெரோ "அங்கே நில் நீ திருடன் இல்லையேல் சுட்டுவிடுவேன்" என கத்தினான். பாலித மோட்டார் சைக்கிளை

செலுத்த ஆரம்பித்தான். அவன் அப்படி செய்யும் போது பெரேரா அவனது தோளில் சுட்டான். பெரேரா மீண்டும் சுடலாம் என்ற பயத்தாலும் வலியின் தன்மையாலும் பாலித்த மோட்டார் சைக்கிளை மறுவலம் திரும்பி நேராக பெரேராவை நோக்கி செலுத்தினான். மோட்டார் சைக்கிள் பெரேராவை தாக்கியதுடன் தலையில் அடிபட்டு அவன் கீழே விழுந்தான். மண்டையோட்டு வெடிப்பு காரணமாக பெரேரா துன்பப்பட்டான்.

பெரேரா மற்றும் பாலித்தவின் குற்றப்பொறுப்புடைமை ஏதேனும் உண்டா என ஆராய்க.

4. ரீட்டா அவளது மிக நெருங்கிய நண்பிகளில் ஒருத்தியான ரமணியிடம் அன்றைய நாளின் பின்னேரத்தில் ஒருவரை தான் சந்திக்க இருப்பதால் அந்நபரை கவருவதற்காக ரமணியின் கழுத்தணியை இரவலாக தரமுடியுமா என கேட்டாள். ரீட்டா அதனை தொலைத்து விடலாம் என அவள் பயந்ததால் ரமணி தயங்கினாள். சந்திப்பின் பின்னர் அன்றைய தினம் மாலையே அதனை மீளளிப்பதாக உறுதியளித்து கழுத்தணியை அவளுக்கு கடனாக தரும்படி ரீட்டா ரமணியைத் தூண்டினாள்.

   ரீட்டா எதிர்பார்த்ததிலும் முன்னதாக அவளது சந்திப்பு நிறைவுபெற்றது. ரீட்டா பணத்தட்டுப்பாட்டில் இருந்ததால், வீட்டுக்குப் போகும் வழியில் கழுத்தணியை அடைவு வைத்து பின்னர் தனது சம்பளத்தைப் பெற்றதும் மீட்டு அதனை ரமணியிடம் கொடுக்கலாம் என தீர்மானித்தாள்.

   ரீட்டாவின் குற்றவியல் பொறுப்புடமையை ஆராய்க.

5. கடலிலே நீண்ட பொழுதைக் கழிக்கும் அந்தோனி ஒரு மீனவனாவான். அவன் மது போதைக்கு அடிமையாகியிருந்தான். ஆனாலும் கடந்த ஆறு மாதகாலமாக குடிப்பதை அவன் நிறுத்தியிருந்தான். அவனது குடிபோதை காரணமாக அவனது மனைவியுடன் தொடர் சண்டையாய் ஈடுபட்டிருந்தான். ஒரு நாள் வழமைக்கு மாறாக நேரத்துடன் மீன்பிடித்துவிட்டு அவன் வீடு திரும்பும்போது அவனது நண்பன் சிராவுடன் கட்டிலில் தனது மனைவி மெடில்டாவைக் காண்கின்றான். இதனால் கடும்கோபமுற்ற அந்தோனி சமயலறைக்கு விரைந்து இரண்டு கோப்பை சாராயத்தை குடித்துவிட்டு கத்தியுடன் திரும்புகிறான். மெடில்டாவுடனான சண்டையைத் தொடர்ந்து "தொலைந்து போ நம்பிக்கையில்லா குடிகாரனே" என அவள் அவனைத் திட்டினாள். இவ்வார்த்தைகளால் அவமானத்திற்கும் கடும்கோபத்திற்கும் உள்ளான அந்தோனி சிராவை 14 தடைவைகள் குத்தினான். மருத்துவமனைக்கு செல்லும் வழியில் சிரா இறக்கின்றான். அந்தோனி கொலைக்குற்றச்சாட்டுக்கு உள்ளாகின்றான்.

   அந்தோனிக்கு அறிவுரை செய்க.

6. இராணுவத்தின் சிறு உத்தியோகஸ்தர் ஒருவரும் வேறு சில பயணிகளும் உடைந்த சிறிய படகொன்றில் சிக்கிக்கொண்டதுடன் அவர்கள் மூழ்கப்போகும் பாரிய ஆபத்தில் இருந்தனர். தப்பிச்செல்லக்கூடியதாக இருந்த ஒரே வழியான கயிற்று ஏணியானது பயத்தாலும் குளிராலும் உறைந்து மேலும் கீழும் அசைய முடியாமல் இருந்த ஒரு மனிதனால் தடைசெய்யப்பட்டிருந்தது. அவனை அசைப்பதற்கு எடுக்கப்பட்ட பயனற்ற முயற்சிகளின் பின்னர் அவனை ஏணியிலிருந்து தள்ளிவிடும்படி ஏனைய பயணிகளுக்கு அந்த சிறு இராணுவ உத்தியோகஸ்தர் கட்டளையிட்டார். அவர்கள் அப்படிச் செய்ததால் அந்த மனிதன் தண்ணீருக்குள் விழுந்து மறைந்தான். ஏனைய சிக்குண்ட பயணிகளுக்கு அப்போது பாதுகாப்பிற்காக ஏணி மீது ஏறக்கூடியதாக இருந்தது.

   இராணுவத்தின் சிறு உத்தியோகஸ்தர் கொலைக்காக குற்றஞ்சாட்டப்பட்டார். அவனுக்கு அறிவுரை செய்க.

7. கீழ்வரும் வழக்குகளை ஆராய்ந்து அருளின் பொறுப்புடைமை பற்றி சட்டக்கருத்தொன்று வரைக.

(I) இங்கிலாந்தில் இருக்கும் சுகுமாரின் முகவராக அருள் கொழும்பில் வசிக்கின்றார். சுகுமாரால் அனுப்பப்படும் முழுப்பணமும் சுகுமாரின் வழிகாட்டலுக்கு அமைய அருளால் முதலீடு செய்யப்பட வேண்டும் என, அருளுக்கும் சுகுமாருக்கும் இடையில் வெளிப்படையான ஒப்பந்தம் ஒன்று இருந்தது. கொழும்பு சுற்றுவட்டாரத்தில் விரைவில் உணவு தயாரிக்கும் உணவகத்திற்கு பொருத்தமான கட்டடம் ஒன்றை வாங்கி அதில் முதலீடு செய்யும்படி அருளுக்கு வழிகாட்டி முப்பது இலட்சம் ரூபா பணத்தை சுகுமார் அவனுக்கு அனுப்புகிறான். அருள் நாணயமற்ற முறையில் வழிகாட்டலுக்கு எதிராக தனது வியாபாரத்தில் அப்பணத்தை முதலீடு செய்கின்றான்.

(II) விரைவு உணவு தயாரிக்கும் உணவகத்திற்கு கட்டடத்தை வாங்குவதற்கு பதிலாக அருள் நல்லெண்ணத்துடன் நாணயமாற்றல்லாமல் கோல்டன்கேட் கம்பனியில் பங்குகளை வைத்திருந்தால் சுகுமாருக்கு மிக பயனுள்ளதாகும் என நம்பி சுகுமாரின் வழிகாட்டலுக்கு முரணாக சுகுமாரின் பெயருக்கு பங்குகளை வாங்குகின்றான்.

8. கீழ்வருவனவற்றில் எவையேனும் இரண்டினைப்பற்றி சிறு குறிப்பெழுதுக.

I குற்றவியல் நீதியின் நிருவாகத்திற்கு உதவி புரியும் அரச நிறுவனங்களின் வகிபங்கு.

II. இயைபாக்கும் கருத்தேற்பும் சாட்சியின் ஒப்புதலும்

III மானபங்கபடுத்தல் எனும் குற்றத்தில் சம்மதம் எனும் விடயம்

IV ஆட்கடத்தலுக்கான (Kidnapping) குற்றம்.

(பதிப்புரிமையுடையது)